DEPOSITION OF WITNESS
Chapter XXIII Code of Criminal Procedure
IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE
NAGAPATTINAM.
S.C. 191/17 P.W. 1

Deposition of witness for Prosecution:

| | |
|---|---|
| Name . திருமதி. விஜயா | Father & Husband Name. |
| Village. | Taluk. |
| Calling. | Age. |

Date: **13.08.2018**

Thiru N. Manivannan, B.A., B.L., Chief Judicial Magistrate, Nagapattinam Solemnly affirmed in accordance with the provision of Act X, of 1873 day of **13.08.2018**

முதல் விசாரணை

நான் செண்பகராயநல்லூரில் குடியிருந்துவருகிறேன். நான் செண்பகராயநல்லூரில் ஊராட்சி ஒன்றி நடுநிலைப் பள்ளியில் சத்துணவு அமைப்பாளராக வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். செண்பகராயநல்லூரில் உள்ள என் அப்பா வீட்டில் நாங்கள் குடியிருந்து வருகிறோம். என் அப்பா காலத்தில் இருந்து எங்கள் வீட்டிற்கு பின்னால் 15 குடும்பங்கள் குடியிருந்து வருகிறார்கள். எங்கள் வீட்டிற்கு பின்புறம் நாங்கள் வேலி வைக்காததால் அந்த குடும்ப நபர்கள் மேற்படி இடத்தை புழங்கி வந்தார்கள். என் அப்பா இறந்தபிறகு நான் அந்த இடத்தில் ஒரு மாடிவீடு கட்டினேன். வீட்டை சுற்றி காம்பவுண்ட் சுவர் கட்டினேன். அதன் அருகே குடியிருந்தவர்கள் ஏன் அங்கே காம்பவுண்ட் வைக்கிறீர்கள் என்று கேட்டார்கள். என் அப்பா எனக்கு பத்திரம் எழுதி கொடுத்துள்ளதால் எனக்கு சொந்தமான இடத்தில் காம்பவுண்ட் சுவர் வைப்பதாக சொன்னேன். இந்த சொத்து சம்மந்தமாக என் அண்ணன் ஒரு வழக்கு தாக்கல் செய்து அதில் என் அண்ணனுக்கு சாதகமாக தீர்ப்பாகியது. 12.9.2010 அன்று அருகில் இருந்த கோவிலில் விஷேசம் என்பதால் அந்த கோவில் விஷேசத்திற்காக காம்பவுண்ட் சுவரை எடுக்க வேண்டுமென்று 11.9.2010 அன்று கேட்டார்கள். அப்போது நேரம் பகல் 11.45 மணியிருக்கும். நாங்கள் அப்போது எங்கள் சொந்த வேலை பார்த்துகொண்டிருந்தோம். என் கணவர் இருந்தார் அவருடன் பன்னீர்செல்வம் என்பவரும் வேலைப்பார்த்தார். அப்பொழுது சத்தம் கேட்டது நாங்கள் சென்று பார்த்தபோது அங்கிருந்தவர்கள் கத்தி கடப்பரை வைத்திருந்தார். அந்தகூட்டத்தில் குஞ்சி கடப்பாரை வைத்திருந்தார், செண்பகராமன் என்வர் மண்வெட்டி வைத்திருந்தார், சக்திவேல் என்பவர் கத்தி வைத்திருந்தார். அப்பொழுது அவர்கள் மதில் சுவரை இடிக்க ஆயத்தம் செய்தார்கள்.

அவர்களை பார்த்து என் கணவர் ஏன்டா மதில் சுவரை இடிக்கிறாய் என்று கேட்டார். அப்பொழுது குஞ்சி என்பவர் இத்தோடு ஒழிந்துபோடா என்று கெட்ட வார்த்தைபேசி என் கணவரது வலது மண்டையில் அடித்துவிட்டார்கள். என் கணவர் கீழேவிழுந்துவிட்டார். செண்பகராமன் கட்டையால் என் கணவர் காலில் அடித்தார். சக்திவேல் கட்டையால் என் கணவரது வலது கையை உடைத்துவிட்டார். செந்தமிழ்செல்வன் என்பவரும் ராமன் எனபவரும் அருகில் இருந்தார்கள். நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு என் கணவரை அழைத்து சென்றேன். அங்கு முதலுதவி சிகிச்சை செய்து அங்கிருந்து திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பினார்கள். அப்பொழுது கரியாப்பட்டினம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் வந்து விசாரித்தார்கள். என் கணவரையும் என்னையும் விசாரித்தார்கள். நான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் அதசாஆ.1 ஆகும். என் கணவருக்கு தலையில் காயம் ஏற்பட்டதால் அடிக்கடி சுய நினைவு இல்லாமல் போய்விடும். என்னை போலிசார் விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை இல்லை.

DEPOSITION OF WITNESS
Chapter XXIII Code of Criminal Procedure
IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE
NAGAPATTINAM.
S.C. 191/17 P.W. 2

Deposition of witness for Prosecution:

| | |
|---|---|
| Name . திரு. பன்னீர்செல்வம் | Father & Husband Name. |
| Village. | Taluk. |
| Calling. | Age. |

Date: **13.08.2018**

Thiru N. Manivannan, B.A., B.L., Chief Judicial Magistrate, Nagapattinam Solemnly affirmed in accordance with the provision of Act X, of 1873 day of **13.08.2018**

முதல் விசாரணை

நான் செண்பகராயநல்லூரில் வசித்து வருகிறேன். விவசாய வேலை பார்த்துவருகிறேன். அசா.1 விஜயா எனது மனைவி. ஆஜர் எதிரிகளை தெரியும். நாங்கள் குடியிருக்கும் இடம் என் மாமனாருக்கு சொந்தமானதாகும். என் மாமனார் அவரது மகனுடன் வெளியூரில் குடியிந்தார். அப்பொழுது அந்த இடம் வீடும் காலியிடமுமாக இருந்தது. எனது மாமனார் வீட்டிற்கு பின்னால் மாமரமும் அதற்கு பின்னால் 10, 15 வீடுகளும் உள்ளது. என் மாமனார் குடியில்லாத சமயத்தில் என் மாமனாருக்கு சொந்தமான இடத்தில் ஒரு ரோடு புதுசாக போட்டுவிட்டார்கள். என் மாமனாரிடமிருந்து அவருக்கு சொந்தமான இடத்தை நாங்கள் வாங்கினோம். நாங்கள் வாங்கிய காலத்தில் ஓட்டுவீடாக இருந்தது. அதை மாடிவீடாக கட்டினோம். மாடி வீடு கட்டிய பொழுது காம்பவுண்ட் சுவரும் கட்டினோம். அந்த காம்பவுண்ட் சுவர் புதிதாக போடப்பட்ட ரோட்டை தடுத்து கட்டியிருந்தோம். அதனால் எங்களுக்குள் விரோதம் இருந்தது. 11.9.2010 அன்று காலை 11.45 மணியளவில் நான் வீட்டிற்கு பின்புறம் விவசாய வேலைப்பார்த்துகொண்டிருந்தேன். என்னுடன் ராமசந்திரன் மகன் பன்னீர்செல்வம் என்பவரும் வேலைப்பார்த்தார். அப்போது வீட்டிற்கு பின்புறம் சத்தம் கேட்டது. நான் சத்தம் கேட்ட இடத்திற்கு ஓடி சென்று பார்த்தேன். அங்கு வெற்றிவேல், செண்பகமாறன், சக்திவேல் மற்றும் 5, 6 நபர்கள் இருந்தார்கள். வெற்றிவேலை கையில் கடப்பரையும், செண்பகமாறன் கையில் மண்வெட்டி மற்றும் கத்தியும், சக்திவேல் கையில் கத்தி மற்றும் கட்டையும் வைத்திருந்தார்கள். அவர்கள் ஆயுதம் மூலம் சுவற்றை உடைக்க இருந்தார்கள். நான் எங்களுக்கு சட்டப்படி தீர்ப்பாகிவிட்டது என்றும் சுவரை உடைக்க கூடாது என்றும் சொன்னேன். அப்பொழுது எதிரி சக்திவேல் நான் உயிரோடு பாதைவிடமாட்டேன் என்று சொல்லி

கடப்பரையால் இடது பக்க தலையில் அடித்தார். அப்போது குச்சிகாரி மகனே, தேவ்டியா மகனே என்றும் திட்டினார். செண்பகமாறன் கையில் வைத்தருந்த கட்டையால் எனது கையில் அடித்து உடைத்விட்டார். சக்திவேல் கட்டையால் எனது காலில் அடித்து உடைத்துவிட்டார். அடிபட்டவுடன் எனக்கு சுயநினைவு இல்லை. என்னை முதலில் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் சேர்த்து அதன்பிறகு திருவாரூர் மருத்துவமனையில் சேர்த்து அதன்பிறகு தஞ்சாவூரில் ரோகினி மருத்துவமனையில் சேர்த்ததாக கேள்விபட்டேன். அந்த ரோகினி மருத்துவமனையில் எனக்கு தலையில் ஒரு அறுவை சிகிச்சை செய்தார்கள். இது சம்மந்தமாக எனது மனைவி புகார் கொடுத்தார். அதற்கு காரணம் எனக்கு சுயநினைவு இல்லை. என்னை போலிசார் விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை இல்லை.

DEPOSITION OF WITNESS
Chapter XXIII Code of Criminal Procedure
IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE
NAGAPATTINAM.
S.C. 191/17 P.W. 3

Deposition of witness for Prosecution:

| | |
|---|---|
| Name . திரு. பன்னீர்செல்வம் | Father & Husband Name. |
| Village. | Taluk. |
| Calling. | Age. |

Date: **13.08.2018**

Thiru N. Manivannan, B.A., B.L., Chief Judicial Magistrate, Nagapattinam Solemnly affirmed in accordance with the provision of Act X, of 1873 day of **13.08.2018**

முதல் விசாரணை

நான் செண்பகராயநல்லூரில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்துவருகிறேன். எனக்கு அசா.1 விஜயாவைத்தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். அசா1 குடும்பத்திற்கும் எதிரிகளுக்கு என்ன பிரச்சனை என்று எனக்குத் தெரியாது. இந்த வழக்கு சம்பவத்தை நான் நேரடியாகப் பார்க்கவில்லை. சம்பவம் நடந்ததாக கூறப்படும் அன்றும் நான் ஊரில் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சி பிறழ்சாட்சியாக்கப்பட்டு அரசதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

அரசதரப்பு குறுக்கு விசாரணை

அசா.1 மற்றும் அசா.2 எனக்கு உறவினர்தான். ஆஜர் எதிரிகளும் எனக்கு உறவினர்கள்தான். நான் அசா.1 வீட்டில் 10 ஆண்டுகளுக்கு மேலாக வேலைப்பார்த்துவருகிறேன். அ்சா.1ன் மகன் கல்லூரில் படித்துவந்தார் என்றால் சரிதான். அசா.1ன் மகள் பங்காளி மகனை காதல் திருமணம் செய்துகொண்டார் என்றால் சரிதான். அதனால் அசா.1 அவரது மகளை வீட்டில் சேர்த்தார்களா என்று எனக்குத்தெரியாது. அந்த மகளை வீட்டில் சேர்த்துகொள்ளும்படி சொன்னோம் என்று சொன்னால் சரியல்ல. சம்பவ நேரத்தில் சம்பவ இடத்தில் நான் அசா.2 உடன் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்தை நேரடியாக பார்த்தேன் என்று சொன்னால் சரியல்ல. அசா.1 அவரது மகளை வீட்டில் சேர்க்க சொல்லியும் அவர் சேர்க்காததால் அவருக்கு எதிராக எதிரிகளுக்கு ஆதரவாகவும் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ தினத்தன்று நான் ஊரில்தான் இருந்தேன் என்றும் ஊரில் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. சம்பவ இடத்தில் என்னுடன் வேறு சாட்சிகளும் இருந்தார்கள் என்று சொன்னால் சம்பவ இடத்தில் நான் இல்லை. குறுக்கு விசாரணை இல்லை.